**இமதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 22 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து இமதுவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | எத்கந்தரவத்தை ஏல விற்பனவுக் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்நோக்குக் கட்டடத்தின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் மூலம் சரி செய்வேன். |
| (இ) | மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 600,000 தொகை பெறுமதியான கபரகல பாடசாலை மாவத்தை செப்பனிடும் நிர்மாண வேலைக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிர்மாண வேலை இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் கணக்கீடு செய்யப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் சபை நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 126,305 தொகைக்கான இரண்டு நிர்மாண வேலைகள் வெளி நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டமையால் பெறவேண்டிய மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர்கள் அப்பெறுமதியால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | சபைக்கு உதவியாக கிடைக்கும் சொத்துக்களை வேறாக இனங்காணக் கூடிய விதமாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்கள் வெவ்வேறாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காண முடியாமல் உள்ளது. எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வேன். |
| (ஊ) | நிர்மாண வேலை மேற்கொள்ளப்படாமல் இருக்கும் போதும் 2019 ஆண்டுக்கு முன்னர் இருந்து ரூபா 26,004,990 தொகை நிர்மாண வேலைக் கடன் என தொடர்ந்தும் ஏடுகளில் காட்டப்பட்டிருந்ததுடன், சடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | நடைமுறைச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பதிவேடுகளை சரி செய்து கணக்குகளை சரி செய்வேன். |

**1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெறவேண்டிய கணக்கு** | | |
| 2019 ஆண்டுக்கு முன்னர் இருந்து காணப்படும் வருமானக் கடன்பட்டோர் மீதி ரூபா 55,131,568 தொகை மற்றும் அம்மீதியுள் ரூபா 4,697,825 தொகை பெறுமதியுடைய மீதி 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படுவதுடன், அந்த கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகளை இனங்கண்டு பெறவேண்டிய கடன் மீதிகளை விரைவாக அறவிடப்பட வேண்டும். | சில மீதிகள் தொங்கல் வருமானமாக காணப்பட்டதுடன், அம்மீதிகள் அங்கீகாரத்தின் மீது பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்பு மீதியில் ரூபா 38,979,805 ற்கான மீதியொன்று ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதல் | செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் இறுதிக் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

செலுத்தப்பட்டிருக்காததுடன், அவற்றில் ரூபா 4,509,520 தொகை 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 155,114,170 தொகைக்கான 13 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி விதி 99 | ரூபா 2,072,483 தொகைக்கான கொடுப்பனவு தொடர்பாக 42 உறுதிச் சீட்டுக்கள் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படாதவாறு பொறுப்பாக இருப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------------<br>நிதிப் பிரமாணம் 571(1)(2)(3) | 02 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 3,999,274 தொகைக்கான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | ஓட்ட நிலையில் காணப்பட்ட 11 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வேன். |
| (ஈ) | 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட நிதியமைச்சுச் சுற்றறிக்கை | பயன்படுத்தப்படாமல் காணப்படும் 04 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,063,089 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,642,431 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வங்கிக் கணக்குகளில் போதியளவு பண மீதியொன்று காணப்படாத போதிலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் பிரதான காசேட்டில் 2018 மார்ச் 31 திகதி முதல் 2019 ஜூன் 30 திகதி வரை மறை மீதியொன்று காணப்பட்டதுடன், 2019 ஜூன் 30 திகதி அம் மறை மீதி ரூபா 3,448,395 தொகை வரை அதிகரித்திருந்தது. | காசேட்டின் படி போதியளவு மீதி காணப்படாத போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் பொறுப்பாக இருப்பேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 616,400 | 546,890 | 416,333 | 752,722 | 518,900 | 610,325 | 255,422 | 594,425 |
| வாடகை | 4,234,000 | 1,072,150 | 927,150 | 606,600 | 4,771,000 | 888,150 | 989,950 | 461,600 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 190,000 | 274,450 | 226,350 | 225,466 | 150,000 | 212,000 | 260,700 | 177,366 |
| | 5,040,400 | 1,893,490 | 1,569,833 | 1,584,788 | 5,439,900 | 1,710,475 | 1,506,072 | 1,233,391 |

### 2.3.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருடங்களை மிகையான காலம் முதல் காணப்படும் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 177,366 தொகையாகும். | நிலுவை அனுமதிப்த்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அனுமதிப்பத்திர நிலுவை ஏற்பட வாய்ப்பில்லை. அத்துடன், அந்நிலுவையை பதிவழிப்பதற்கு மீளாய்வாண்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

### 2.3.3 குத்தகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருடங்களை மிகையான காலம் முதல் காணப்படும் நிலுவை குத்தகை மீதி ரூபா 461,600 தொகையாகும். | நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை வகுக்கப்படும் போது ஏற்பட்டுள்ள கடனை அகற்றுவதில் சிக்கல் தன்மையாக காணப்படுவதால் சட்டத்தின் பிரிவு 152 இன் படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய செய்பணிகளுக்காக மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பயன்தரு திட்டம் ஒன்று தயாரிப்பேன். |

#### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வகைப் பகுத்தப்படாமல் சேகரிக்கப்படும் குப்பைகள் சபைக்குச் சொந்தமான ஹொரதொடகந்த வளவில் போடப்பட்டு வந்ததுடன், அந்த இடத்தில் குப்பை போடுவதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். | எதிர்காலத்தில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வர்த்தக தொடர் கடடடத்தொகுதியில் கீழ் மாடியில் காணப்பட்ட 12 கடைகள் 2019 திசெம்பர் 31 திகதி வரை வியாபார சமூகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | வீதி விளக்கு பராமரிப்புக்காக மின்சார சபையுடன் 2006 ஆண்டு முதல் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமையால் வீதி விளக்கு பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்ட செலவை மீளளிப்புச் செய்ய முடியாமல் இருந்தது. 2019 திசெம்பர் 31 திகதி வரை மீளளிப்பு செய்யப்படாதிருந்த தொகை ரூபா 5,222,770 தொகையாகும். | சபை நிதியத்திலிருந்து வீதி விளக்கு பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மிகையாக செலுத்தியிருந்த சம்பளம் ரூபா 47,625 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகையாக செலுத்திய சம்பளத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கு வேண்டும். | 2020 ஜூன் மாதம் முதல் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுமார் 3 ஏக்கர் காணியில் 2014 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த கருவா பயிர் செய்கையின் மூலம் 2015 ஆண்டின் போது ரூபா 255,868 தொகை மற்றும் 2016 இன் போது ரூபா 305,000 தொகை உழைக்கப்பட்டிருந்தது. டென்டர் உடன்படிக்கை முடிவடைந்த 2018 ஏப்ரில் 06 திகதியின் பின்னர் கருவா பயிர்செய்கையின் மூலம் வருமானம் ஏதும் உழைத்திருக்கவில்லை. | சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்வேறு பதவிகளைச் சேர்ந்த 08 ஊழியர்கள் உரிய பதவிக்குரிய கடமை அல்லாத ஏனைய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | உரிய கடமைகளை சாட்டுவதற்கும் கடமை அலுவல்களை முறைப்படுத்துவற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் மிகைப்பதவி ஒன்றினை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியை முறைப்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5 குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹொரதொடகந்த காணியில் சுமார் 06 ஏக்கர் அளவான காணி பயன்தரு பொருளாதார விடயங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | காணிப் பகுதியை பயன்படுத்த வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | ரூபா 4,984,798 ற்கான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தகனகூடம் 2018 ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்டது. | தகனகூடத்தை திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2007 ஆண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த 10 KW மின்பிரப்பாக்கி விளைவற்று காணப்பட்டது. | திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | திருத்த வேலைக்காக கூடிய செலவொன்று ஏற்படுவதனால் எதிர்காலத்தில் திருத்த வேலை மேற்கொள்வேன். |

4. **கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |